10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 225 வியாழக்கிழமை ஜனவரி 04 2018 ethirolimedia@gmail.com 021

## பணிப் புறக்கணிப்பின் பின்னணியில் போதை வர்த்தகர்கள்

வவுனியா, ஜன.04

போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்களின் பின்னணியிலேயே இ.போ.ச. வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர் என சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி ஆரம்பமான பணிப் புறக்கணிப்பு நான்காவது 06▶

# கூட்டணியை உடைத்திராவிடின் பிரபாகரன் இன்று இருந்திருப்பார்

### கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி



"தமிழர் விடுதலைக் கூட்டணியை தங்கள் சுயநலனுக்காக உடைக்காமல் இருந்திருந்தால் பிரபாகரன் என்ற இலட்சியப் போராளி இன்று இருந்திருப்பார். 2004 ஆம் ஆண்டே போர் முடிந்திருக்கும். பல இலட்சம் மக்கள், பல ஆயிரம் போராளிகள் உயிருடன் இருந்திருப்பர். மூன்று சுயநலவாதிகளே இத்தனை அழிவுகளுக்கும் காரணம்"

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

தமிழர் விடுதலைக் கூட்டணி சின்னத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் 06▶

## மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரம் அறிக்கையை வெளியிட்டார் ஜனாதிபதி



**மகேந்திரன் மோசடிக்கு உடந்தை**
**ரவி மீது ஊழல், குற்ற சட்டம் பாயும்**
**பிரதமர் பொறுப்புக் கூற வேண்டும்!**
**852.9 கோடி ரூபா அரசுக்கு நட்டம்**
**நட்டத்தை ஈடு செய்ய புதிய சட்டம்**

கொழும்பு, ஜன. 04

இலங்கை மத்திய வங்கியில் இடம் பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் ஆராய நியமித்த ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை விசேட உரை மூலம் ஜனாதிபதி நேற்று வெளியிட்டார்.

அந்த உரையில், ஆயிரத்து 257 பக்கங்கள் கொண்ட முழுமையான அறிக்கையை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ளது. மத்திய வங்கியில் 2008 ஆம் ஆண்டு முதல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. அவை தொடர்பில் தேடிப் பார்க்க முழுமையான கணக்காய்வை மேற்கொள்ள வேண்டியதே முதலில் செய்ய 06▶

## மக்கள் விரும்பும் மாற்றத்தை நிச்சயம் நாம் ஏற்படுத்துவோம்



யாழ்ப்பாணம், ஜன. 04

மக்கள் நம்பிக்கையுடன் எம்முடன் இணைந்து பயணித்தால் அவர்கள் விரும்பும் மாற்றத்தை நிச்சயமாக நாங்கள் ஏற்படுத்திக் கொடுப்போம் - என நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை வேட்பாளர் வி.மணிவண்ணன்.


யாழ். மாநகர நவீன அபிவிருத்தி திட்ட வரைபுகள் தன்னிடம் உள்ளன எனத் தெரிவித்த அவர், இதில் புலம்பெயர் தரப்புகளையும் உள்வாங்கி செயற்படத் தயாராகவுள்ளார் எனவும் கூறினார்.

யாழ். ஊடக அமையத்தில் 06▶



# பிரபாகரன் மண்ணில் யாசகத் தலைவர்கள்

### முதலமைச்சர் நெத்தியடி



யாழ்ப்பாணம், ஜனவரி 04

"பிரபாகரன் பிறந்த மண்ணில் யாசகம் பெற எத்தனிப்போர் வாழ்ந்து வருவது விந்தையே" என சூசகமாக இன்றைத் தமிழ் அரசியல் தலைவர்களை எள்ளி நகையாடியுள்ளார் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

வாரம் ஒரு கேள்வி பதில் என்ற தலைப்பில் அவரிடம் கேட்கப்படும் வினாக்களில் ஒன்றைத் தெரிந்து அதற்கு 06▶

# காலையில் இணக்கம் மாலையில் குழப்பம்

### இ.போ.ச.வின் போராட்டம் தொடரும் உண்ணாவிரதத்திலும் ஈடுபட முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 04

நேற்றுக் காலை முதலமைச்சருடனான பேச்சில் இணக்கம் எட்டப்பட்ட போதும் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்திப் பணிப் புறக்கணிப்புத் தொடரும் என அறிவித்துள்ளது இ.பே.ச.வின் வட பிராந்திய ஒன்றிணைந்த தொழிற்சங்கம்.

பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் தாம் இன்று தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளனர் என தொழிற்சங்கத்தின் செயலாளர் அ.அருட்பிரகாசம் நேற்று மாலை அறிவித்தார்.

கடந்த மூன்று நாட்களாக 06▶

## அரசியலமைப்பு இடைக்கால அறிக்கை மூவின மக்களையுமே ஏமாற்றுகிறது



### யாழில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன்

யாழ்ப்பாணம், ஜன. 04

"புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான இடைக்கால அறிக்கையில் சில விடயங்கள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளன. சிங்கள மொழியில் சிங்களவர்களையும் தமிழ் மொழியில் தமிழர்களையும், இரண்டு மொழிகளிலும் முஸ்லிம்களையும் இடைக்கால அறிக்கை ஏமாற்றுகிறது"

இவ்வாறு கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிஷாட் பதியுதீன், தனது கட்சி சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் யாழ். மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை அறிமுகப்படுத்தும் நிகழ்வுக்காக நேற்று யாழ். வந்தார். இதன் பின்னர் பத்திரிகையாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"எந்தவொரு தீர்வாக இருந்தாலும் தெளிவாகக் குறிப்பிடப் 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# வீட்டுக் கடன் பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு




கொழும்பு,ஜன.04

சொதுரு பியச நிவாரணக் கடன் திட்டத்தின் கீழ் நன்மையடையும் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் கீழ் 2020 ஆம் ஆண்டு அளவில் ஒரு இலட்சம் பேர் பயனடைய வேண்டும் என்பதே இதன் இலக்காகும்.

750 சதுர அடிக்கும் குறைவான வீட்டை விரிவு படுத்த அல்லது அதன் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்ய முயற்சிப்போர் நிதி வசதி இல்லாமை காரணமாக அதனைப் பூர்த்தி செய்யாமல் இருப்போருக்கு உதவும் வகையில் இரண்டு இலட்சம் ரூபா வரையிலான கடன் வழங்கச் சொதுரு பியச என்ற கடன் திட்டம் 2017 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டம் மூலம் முன்மொழியப்பட்டது.

2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 14 ஆம் திகதி வரையில் இந்தக் கடன் திட்டத்தின் கீழ் 3354 பேர் பதிவு செய்யப்பட்டனர். நகரப் பிரதேசங்களுக்கு அப்பால் உள்ள குறைந்த வருமானத்தைக் கொண்ட வீட்டு உரிமையாளர்கள் பெரும்பாலானோரின் வீடுகள் 750 சதுர அடியைக் கொண்டுள்ளது. இருப்பினும் இவர்களுக்கு இந்த கடன் வசதிகள் கிடைப்பதில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கடன் திட்டத்துக்கு அமைவாகக் கவனத்தில் கொள்ளப்பட்ட குறைந்த வருமானங்களைக் கொண்டவர்களின் வீடுகளின் சதுர அடியை 1000 சதுர அடிகளாக அதிகரிப்பதன் மூலம் சொந்துறு பியச என்ற கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## இந்தியப் பிரதித் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நியமனம்



கொழும்பு,ஜன.04

இந்தியாவின் பிரதித் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக, இந்தியாவின் வெளியகப் புலனாய்வு முகவரமைப்பான றோவின் முன்னாள் தலைவரான ரஜிந்தர் கன்னா, நேற்று புதன்கிழமை நியமிக்கப்பட்டார்.

பிரதித் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த, இந்திய வெளிவிவகாரச் சேவையின் முன்னாள் அதிகாரி அரவிந்த் குப்தா கடந்த ஓகஸ்ட் மாதம் ஓய்வுபெற்ற பின்னர், வெற்றிடமாக இருந்த இந்தப் பதவிக்கே, ரஜிந்தர் கன்னா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 1978ஆம் ஆண்டு றோவில் இணைந்து கொண்டார். பாகிஸ்தான் மற்றும் இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு எதிராக இவரது கண்காணிப்பில் பல தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஒப்பந்த அடிப்படையில் இவரைப் பிரதித் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையின் நியமனக் குழு முடிவு செய்துள்ள போதும் இவரது பணிக்காலம் அறிவிக்கப்படவில்லை.

ரஜிந்தர் கன்னா தற்போது, தேசிய பாதுகாப்புச்சபை செயலகத்தின், அயல் நாடுகள் கற்கைகள் பிரிவில் சிறப்பு பணி அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

அவரது தலைமையின் கீழேயே, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் உள்ளிட்ட நாடுகள் தொடர்பான, கொள்கை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், பிரதித் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், புலனாய்வு அமைப்புகளின் தலைவர் பதவியில் இருந்தவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும். (அ)

# காலநிலை சீராகும்

கொழும்பு,ஜன.04

நாட்டின் பல மாகாணங்களில் சீரான காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுப் புதன்கிழமை அறிவித்தது.

எவ்வாறாயினும் தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேற்கு , சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளைகளில் பனிமூட்டம் காணப்படக் கூடும்.

கொழும்பிலிருந்து ஹம்பாந்தோட்டை வரையான ஆழமான கடற்பகுதியின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். ஏனைய கடற்பரப்பில் சீரான காலநிலை நிலவும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாகப் பலத்த காற்று வீசக் கூடும். ஆக்வே இடிமின்னலின் போது அவதானமாகச் செயற்படுமாறு திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# இலங்கையில் 7,500 பேர் ஓரினச் சேர்க்கையில்



கொழும்பு,ஜன.04

இலங்கையில் சுமார் 7,500 ஓரினச் சேர்க்கையாளர்கள் உள்ளதாகத் தேசிய எயிட்ஸ் தடுப்புப் பிரிவு நேற்றுப் புதன்கிழமை தகவல் வெளியிட்டது.

நாட்டில் 1.2 மில்லியன் பேரிடம் எச்.ஐ.வி தொற்றுத் தொடர்பில் அண்மையில் சோதனை நடத்தப்பட்டது. இதில் 280 பேருக்கு எயிட்ஸ் நோய்த் தொற்று உள்ளமையும், 7500 பேர் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர் எனப் பல்வேறு தரப்பினருக்கும் எயிட்ஸ் நோய்த் தொற்றுப் பரவியுள்ளதாகவும் குறிப்பாக ஓரினச் சேர்க்கையாளர்களே அதிகளவில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கொழும்பு, கம்பஹா, காலி, களுத்துறை மற்றும் குருணாகல் மாவட்டங்களிலேயே அதிகளவான நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இதேவேளை, கடந்த 2013ஆம் ஆண்டு சுமார் 8,500 ஓரினச் சேர்க்கையாளர்கள் இலங்கையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. (அ)

# மரக் கன்றுகள் வழங்கி வைப்பு

கொழும்பு,ஜன.04

ஜனாதிபதி செயலக ஆளணியினருக்கு மரக் கன்றுகளைப் பகிர்ந்தளிக்கும் செயற்றிட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

மலர்ந்துள்ள புதிய ஆண்டில் சுற்றாடல் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம், தமது நாளாந்த நுகர்வுக்குப் பொருத்தமானவற்றைத் தமது வீட்டுத் தோட்டத்திலேயே பயிர் செய்து கொள்ளல் வேண்டுமென்ற செய்தியை அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் பொருட்டுக் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

ஜனாதிபதி செயலக ஆளணியினர் 2018ஆம் ஆண்டில் கடமைகளை ஆரம்பித்ததைத் தொடர்ந்து இந்தச் செயற்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்ணான்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஹன கீர்த்தி திசாநாயக்க உள்ளிட்ட சிலருக்கு பழ மரக்கன்றுகளை வழங்கினார். பின்னர் ஜனாதிபதியின் செயலாளர் ஏனையோருக்கு பழக் கன்றுகளை பகிர்ந்தளித்தார். (அ)

# அபூர்வ வெள்ளை அணில் இலங்கையில் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஜன.04

இலங்கையில் அபூர்வமான அணில் இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரணாநாயக்க, செலவ, பில்லேவ பிரதேசத்தில் அரிய வகை வெள்ளை நிற அணில் ஒன்று இனங் காணப்பட்டுள்ளது. அந்தப் பகுதி வீடொன்றில் விழுந்து கிடந்த அணில் குட்டியை, வீட்டு உரிமையாளர்கள் மீட்டு, செல்லப் பிராணியாக வளர்த்து வருகின்றனர்.

இதற்கு முன்னரும் இந்தப் பிரதேசத்தில் வெள்ளைநிற அணில் குட்டி ஒன்றைக் காண முடிந்ததாகவும், இலங்கையில் சாதாரண அணில்கள் காணப்பட்ட போதும், இவ்வாறு வெள்ளை நிற அணில்கள் காணப்படுவது மிகவும் அபூர்வம் என வனஜீவராசிகள் தொடர்பான அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)



# மைத்திரி – ரணில் தனித்தனி அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜன.04

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று புதன்கிழமை தனித்தனியாகச் சிறப்பு அறிக்கைகளை வெளியிட்டனர்.

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பான அதிபர் ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகள் தொடர்பாக மைத்திரிபால சிறிசேன நேற்று ஊடகங்களில் சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டார்.

இது தொடர்பான சிறப்பு அறிக்கையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளியிட்டார்.

இதில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே.க வேட்பாளர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். (அ)

# "எதிர்ப்பு எனதல்ல"





கொழும்பு,ஜன.04

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு அரசியல் கட்சியோ, சுயேட்சைக் குழுவோ, சுவரொட்டிகள், பதாதைகளில் தமது படத்தைப் பயன்படுத்துவதற்குத் தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மேலும் அரசியல் கட்சிகள் தமது படத்தைச் சுவரொட்டிகள், பதாதைகளில் பயன்படுத்தி வருவதை தாம் அறிந்திருப்பதாகவும், மேலும், தேர்தல் சட்டத்தை மீறி எவரேனும், த்னது படங்களை பயன்படுத்திப் பரப்புரைகளைச் செய்தால் அதன் மீது நடவடிக்கை எடுப்பது தேர்தல் ஆணைக்குழுவைப் பொறுத்த விடயம் என்றும் குறிப்பிட்டிருந்தார். (அ)

எதிரொலி
Ethiroli
வியாழன். 04 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## குப்பைப் பொலித்தீனுக்கு 'குட்பை'

மாற்றங்கள் பெரும்பாலும் முதலில் வெறுப்பையும், பின்னர் அதனைச் சகித்து வாழும் பொறுப்பையும் உண்டாக்குவதுண்டு. எப்போதேனும் சில மாற்றங்கள் மட்டுமே உடனடியாகவே 'அட , இது நல்லாயிருக்கே' என வரவேற்பைப் பெறுகின்றன.

ஜனவரி முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பொலித்தீன் பாவனைக்கும், விற்பனைக்கும், உற்பத்திக்கும் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது, மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசு கடுந்தொனியில் எச்சரித்துள்ளது. சுகாதாரத் துறை அமைச்சராக மகிந்த அரசின் காலத்தில் பதவி வகித்த போது, தன்னால் செய்ய முடியாது போன சில நல்ல திட்டங்களை, சகல அதிகாரங்களையும் தன் வசம் கொண்டிருக்கும் ஜனாதிபதி காலப்பகுதியிலாவது செய்துமுடித்து விட வேண்டுமென அவர் நினைக்கிறார். அப்படித்தான், புற்றுநோய்க்கு ஏதுவாகக் கூடிய கூறுகளைக் கொண்டிருந்ததனால், கூறுகெட்ட 'அஸ்பெஸ்டஸ்' கூரைகளுக்கு 2020 ஆம் ஆண்டு முதல் தடை என்று முன்னறிவிப்புச் செய்திருந்தார் மைத்திரி. ஆனால், யார் கண்பட்டதோ தெரியவில்லை. தேயிலைப் பொதிக்குள் வண்டு இருந்ததாக, இலங்கைத் தேயிலை இறக்குமதிக்கு ரஷ்யா தடை விதிப்பு என்னும் 'செக்' வைத்தபோது, அந்தச் சதுரங்க ஆட்டத்தில் இருந்து தப்புவதற்கு, 'அஸ்பெஸ்டஸ்' கூரைகள் மீதான தடையை விலக்குவதே புத்திசாலித்தனமான விட்டுக் கொடுப்பாக இருந்தது. விட்டுகொடுத்து ஆடியதன் விளைவாக மீண்டும் ரஷ்யாவுக்கு, ஒய்யாரமாகப் போகத் தொடங்கியுள்ளது இலங்கைத் தேயிலை.

அதேபோன்ற ஏதேனும் அழுத்தம் கொடுக்கும் நகர்வுகளால் பொலித்தீன் மீதான தடையையும் அரசு விலக்கிக் கொள்ளுமோ என்று ஒரு தரப்பினர் சஞ்சலமும், இன்னொரு தரப்பினர் மகிழ்வும் அடைந்தனர். மகிழ்வடைந்த தரப்பினர், பொலித்தீன் இல்லாமல் வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாமல் இருப்பவர்கள். சஞ்சலப்பட்டவர்கள், பொலித்தீனால் சூழலும், மனிதர்களும் எதிர்காலத்தில் சிதைந்து போவதை அறிந்தவர்கள்.

நல்லவேளையாக, எவ்வித தடைகளும் இல்லாமல் புத்தாண்டோடு பொலித்தீன் தடையும் நடைமுறைக்கு வந்தேவிட்டது. இப்போதெல்லாம் சாப்பாட்டுக் கடைகளில் உணவோடு பிசுபிசுக்கும் பொலித்தீன் தாள்கள் இல்லை. பச்சையாகச் சிரிக்கும் வாழையிலை ஏந்திய தட்டுகளில் உணவைக் காண்கையில் ஏதோ ஒரு ஆனந்தம். கடைகளில் 5 ரூபாவுக்கு வாங்கிய பொருளையும் கொண்டு போக, தரப்படும் சொப்பிங் பையும் ஒரே நாளில் காணாமல் போய்விட்டது. திடீரெனப் பொலித்தீன் பொருட்கள் மாயமாகிவிட்டதால், அதனை அறியாமல் கடைகளுக்கு பொருள்களை வாங்கச் சென்றோர், வாங்கிய பொருள்களைக் கையில் ஏந்தியபடி எப்படிக் கொண்டு செல்வது என்று தெரியாமல் விழிபிதுங்கி நின்றனர். நல்லவேளையாக, 'பொலித்தீன் தடையால் மக்களுக்கு பெரும் பாதிப்பு, நுகர்வு குறைந்ததால் வர்த்தகர்களுக்கு பேரிழப்பு' என்று யாரும் போராடக் கிளம்பவில்லை.

எந்தவொரு மாற்றமும் உடனடிப் பரிகாரத்தையும் இடுப்பில் கட்டிக் கொண்டு வருவதில்லை. பொலித்தீன் தடையால், மீண்டும் வாழையிலைக்கும், கடதாசிப் பைகளுக்கும் மவுசைக் கூட்டியிருக்கிறது. கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு முன்னர் வரை பொலித்தீன் அற்ற காலத்தில் இதே கடதாசிப் பைகளும், வாழை மற்றும் தாமரை இலைகளுமே மக்களின் புழக்கத்தில் இருந்தன. இப்போது மீண்டும் அவற்றின் காலம் .

இந்த மாற்றத்தின் மூலம், முழு நாட்டையுமே குப்பைக் காடாக்கி, நச்சுச் சூழலை உண்டாக்கிய பொலித்தீனுக்கு 'குட்பை' சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மீண்டும் அதனை வரவிடாமல் தடுப்பதிலேயே எங்களின் ஆரோக்கியமும், சூழலின் தன்மையும் தங்கியிருக்கின்றன.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## பொலிஸ் சிங்கத்தை பிடிப்பதற்கு விசாரணை

கொழும்பு, ஜன.04

யாழ்ப்பாணத்து இளைஞர்களால், 'சிங்கம் -2' என அழைக்கப்பட்ட, முன்னாள் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீகஜனை கைது செய்வதற்கான விசேட விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன எனப் பொலிஸ்ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

மாணவி வித்தியா படுகொலை வழக்கின் பிரதான குற்றவாளி தப்பிச் செல்வதற்கு உதவிய குற்றச்சாட்டில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான ஸ்ரீகஜன் நாட்டிலிருந்து தப்பிச் செல்வதற்கான எவ்விதச் சாத்தியங்களும் இல்லை எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக் காட்டினார். ஏற்கனவே வெளிநாடு செல்ல முயற்சித்த அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் திருப்பி அனுப்பியிருந்தனர். ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் ஸ்ரீகஜனின் வெளிநாட்டு கடவுச்சீட்டு ஏற்கனவே முடக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.(அ)



## பனி முற்றுகை

வவுனியா, ஜன.04

வவுனியாவில் நேற்று அதிகாலை வழமைக்கு மாறாக கடுமையான பனி மூட்டம் நிலவியது. குறிப்பாக பிரதான வீதிகளை பனிமூட்டம் மூடியதால், சாரதிகள் வாகனங்களைச் செலுத்துவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் காலை 9 மணிவரை இந்தக் கடும் பனி மூட்டம் காணப்பட்டது.

இதன் காரணமாக பாடசாலை மாணவர்களும் சிரமங்களை எதிர் கொண்டிருந்தனர்.

அண்மைக்காலமாக குளிருடன் கூடிய காலநிலை வவனியாவில் காணப்பட்ட போதிலும் நேற்றைய நிலை போன்றதான பனி மூட்டம் நிலவியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## கடையடைப்பு பிசுபிசுப்பு

வவுனியா, ஜன.04



பழைய பஸ் நிலையத்தைச் சூழவுள்ள வர்த்தகர்களுக்கு ஆதரவு கோரி வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவரினால்விடுக்கப்பட்ட கோரிக்கையையும் மீறி, நகர வர்த்தகர்கள் பலரும் நேற்றுத் தமது கடைகளைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

புதிய பஸ் நிலையம் இயங்கத் தொடங்கியதால், பழைய பஸ் நிலையம் அமையப்பெற்ற இடத்தில் உள்ள வர்த்தகர்கள் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் குறித்த பஸ் நிலையத்தில் உள்ளூர் சேவைகளையாவது செயற்படுத்த வேண்டும் எனக் கோரி கதவடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கடையடைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நகரில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் கதவடைப்பில் ஈடுபடுமாறு வவுனியா வர்த்தகர் சங்கத்தின் தற்காலிக தலைவர் கிரிதரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி, கொரவப்பொத்தான வீதி, யாழ் வீதியில் உள்ள கடைகள் திறக்கப் பட்டு வியாபார நடவடிக்கைகள் வழமை போல் இடம்பெற்றன. (அ)

## நீதிமன்றில் பிள்ளையான்

கொழும்பு,ஜன.04

பிள்ளையான் எனப்படும், சிவநேசதுரை சந்திரகாந்தன் , மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை தொடர்பான விசாரணைகளுக்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிப்தி முன்னிலையில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நீதிபதி இஸ்ஸடீன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து நாளை மற்றும் 8ஆம், 9ஆம் திகதிகளில் நான்கு அமர்வுகளாக மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட உள்ளது. (அ)

## கோயிலுக்குப் போனவரின் வீட்டில் பறிபோனது பணம்

சாவகச்சேரி, ஜன.04

சாவகச்சேரி -கோவிற்குடியிருப்பு பகுதியில் தனிமையில் இருந்த மூதாட்டி ஒருவர் கோயிலுக்குச் சென்றிருந்த சமயம், அவரது வீட்டில் இருந்த ஐம்பதாயிரம் ரூபாவை திருடர்கள் "அபேஸ் "பண்ணியுள்ளனர்.


குறித்த மூதாட்டி திருவெம்பாவைப் பூஜையின் இறுதி தினமான நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை காலை 7 மணியளவில் அருகில் உள்ள முருகமூர்த்தி ஆலயத்துக்குச் சென்றிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவரது வீட்டின் முன் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் , 50 ஆயிரம் ரூபா பணத்தை கையகப்படுத்தினர். இதன் போது பணப்பையில் இருந்த மூதாட்டியின் பாஸ் போர்ட்,வங்கிப் புத்தகங்கள், அடையாள அட்டை என்பவற்றை வெளியே வீசி விட்டு பணத்தை மாத்திரம் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (அ)

## மைதானமானது பஸ்நிலையம்

வவுனியா, ஜன.04

வவுனியா பழைய பஸ்நிலையத்தில், இ.போ.ச பஸ்கள் இல்லாமையாலும், அங்குள்ள வியாபார நிலையங்கள் நேற்றுக் கடையடைப்பில் ஈடுபட்டமையாலும், வெறிச்சோடி இருந்த அந்தப் பிரதேசத்தில் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடினர்.

புதிய பஸ் நிலையத்தை திறந்ததால், தங்களது வர்த்தகம் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்து பழைய பஸ் நிலையக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள 130க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், தமது கடைகளுக்கு முன்பாக கறுப்பு கொடிகளை பறக்க விட்டு கடையடைப்பு செய்து தங்களது எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே குறித்த பகுதியைத் தங்களது கிரிக்கெட் மைதானமாக இளைஞர்கள் மாற்றியுள்ளனர். (அ)



## இன்று நாளும் கோளும்

04.01.2018 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 20 ஆம் நாள்

திருதியை பி.ப. 02.34 மணி வரை | பூசம் 10.23 வரை | அமிர்தசித்தயோகம்


இராகுகாலம் 01.30 - 03.00 | சுபநேரம் மு.ப. 10.30 - 11.30 | எமகண்டம் மு.ப. 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நற்செயல் | பக்தி | ஒய்வு | ஆர்வம் | நிம்மதி | பாராட்டு | வெற்றி | நலம் | நன்மை | பகை | இலாபம் | வரவு |

# கைத்தறி ஆலையை மீள இயக்க ஆலோசனை

கிளிநொச்சி,ஜன.04

பல்வேறு இடர்பாடுகள் காரணமாகத் தொடர்ந்து இயங்க முடியாது முடங்கிப்போயிருக்கும் கைத்தறி நெசவு ஆலையை மீள இயக்குவது குறித்து வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர்களுடன் கடந்த 28 ஆம் திகதி ஆலோசனை நடத்தியுள்ளார்.



கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம் பகுதியில் தொழிற்துறைத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கைத்தறி நெசவு ஆலையைத் தொடர்ந்தும் இயக்குவதில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்து வருவது குறித்து வட மாகாணக் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

வட மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தினால் தொழிற்திறன் அபிவிருத்தி நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த கைத்தறி நெசவு ஆலையில் 9 கைத்தறிக் கருவிகளைக் கொண்டு 17 தொழிலாளர்கள் இயங்கி வந்திருந்தார்கள். இந்த நிலையில் கெயார் நிறுவனத்தினால் கைத்தறி நெசவு தொடர்பான பயிற்சிகளும்,ஊக்குவிப்புக் கொடுப்பனவும் கெயார் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

பயிற்சி பெற்ற நெசவாளர்களுக்குப் போதிய வருவாய் உறுதிப்பாடு இல்லாத காரணத்தினால் தொடர்ந்தும் கைத்தறி நெசவில் ஈடுபட முடியாமல் அவர்கள் வேறு தொழில்களுக்குச் செல்லும் நிலையேற்பட்டதனால் முடங்கிப்போயிருக்கும் குறித்த கைத்தறி நெசவு ஆலையை மீள இயக்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பொறுப்பு வகித்து வரும் தொழிற்துறைத் திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் தொழிலாளர்களால் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

## கரவெட்டியில் டெங்குத் தாக்கம்

கரவெட்டி பகுதியில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிகை அதிகரித்து வருவதாக கரவெட்டி வைத்தியஅதிகாரி சுதோக்குமார் தெரிவித்துள்ளார் .

"2017 நவம்பர் மாதம் 39 பேரும், டிசம்பர் மாதம் 34 பேரும் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் 2018 ஜனவரி 1ஆம் திகதியில் இருந்து 3ம் திகதி வரை 5 பேர் டெங்குநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கரணவாய், நெல்லியடி, அல்வாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே டெங்கால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மக்கள் தமது வாழ்விடத்தையும், சூழலையும் சுத்தமாகப் பேணிவதன் மூலம் டெங்குப் பாதிப்பைத் தவிர்க்கலாம்" என அவர் மேலும் சுட்டிகாட்டியுள்ளார் . (அ-11)

## ஈ.பி.டி.பி வேட்பாளரின் தாய் மீது தாக்குதல்

வவுனியா , ஜன.04


வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் ஈ.பி.டி.பி யின் வவுனியா தெற்கு பிரதேச சபையின் மகாறம்பைக்குளம் வேட்பாளரான தர்மகுலசிங்கம் சுஜிவன் என்பவரது தாயாரை, நேற்று முன்தினம் இரவு 7.00மணியளவில் இனந்தெரியாத நபர் மூவர் தலைக்கவசத்தினால் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தர்மகுலசிங்கம் சத்தியதேவி (வயது-56) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளானவராவார்.

" இரவு 7.00 மணியளவில் மூவர் வீட்டிக்கு வந்து "உங்களது மகன் எங்கே?"எனக் கேட்டனர். நான் "அவர் வீட்டில் இல்லை வெளியே சென்று விட்டார்" எனத் தெரிவித்தேன். "அவர் என்ன தேர்தலா கேட்கின்றார். அவனை வரச் சொல்லுங்க வெட்டமால் விட மாட்டேன்" எனக் கூறி விட்டு என்னைத் தகாத வார்த்தையினால் பேசினார்கள். அப்போது அவ்வாறு கதைக்க வேண்டாமென நான் தெரிவித்த போது எனக்கு தலைக்கவசத்தினால் அடித்து விட்டு, வீதியில் "உங்கள் மகனைக் கண்டால் வெட்டுவோம். வீட்டுடன் கொளுத்துவோம்" என அச்சுறுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் மூவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.(அ)

# விடுதலைக் கூட்டணியின் தேர்தல் அறிக்கை வெளியீடு





யாழ்ப்பாணம்,ஜன.04

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியீடும், வேட்பாளர் அறிமுகமும் யாழ்ப்பாணம் ,நல்லூர் இளஞ்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.



தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டு வைக்க தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி பெற்றுக் கொண்டார்.

தேர்தல் பரப்புரைக் கீதத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டு வைக்க ஜனநாயகத் தமிழரசு கட்சியின் தலைவர் வி.எஸ்.சிவகரன் பெற்றுக்கொண்டார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணி ஆகிய கட்சிகள் வேட்பாளர்களை அறிமுகம் செய்திருக்கும் நிலையிலையே தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமது கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களை நேற்று அறிமுகம் செய்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈரோஸ், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கட்சி, ஜனநாயக தமிழரசு கட்சி மற்றும் பொது அமைப்புக்கள் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத் தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது தெரிந்ததே. (அ)



## சனத்தின்ரை சௌகரியந்தான் முக்கியம். விளங்கிதோ?

ஒண்டு சரிவந்த உடனை எல்லாத்தையம் செய்யப்பாக்கிறது. நான் உந்த சீ.ரி.பி க்காரரைத்தான் சொல்லுறன். ஆகலும் சேட்டை கூடிப்போச்சுது. அவைளுக்கு மட்டுமில்லை இஞ்சை இருக்கிற எல்லாருக்கும் பிரச்சினையள் இருக்கு. பிரச்சினை இல்லாத ஆக்கள் உலகத்திலை ஒருத்தருமில்லை. உபாலி உபத்திரவம் தாறனெண்டு அண்டைக்கு வேலை நிறுத்தத்தைச் செய்தினம். அது நியாயம். ஒத்துக்கொண்டம். உடனை சம்பந்தர் தலைகீழா நிண்டு உபாலியை மாத்தி பிரச்சினையைச் சரியாக்கிப் போட்டார். பிரச்சின்ன எண்டு ஒருக்கா வேலை நிறுத்தத்தைச் செய்யலாம். அடிக்கடி செய்தால் மதிப்புக் கெட்டுப்போம். உண்மையான ஒண்டுக்கு உவையள் கொடி பிடிச்சுக்கொண்டு நிண்டால் "உவை அடிக்கடி வேலை நிறுத்தம் செய்யிறவைதானே?" எண்டு சனம் கையை விட்டிடும். சனத்தின்ரை சப்போட்டு இல்லாமல் எந்தப் போராட்டமும் சரிவராது. அதைச் சரியா விளங்கிக் கொள்ள வேணும். சனம் எதிராக் கிளம்பினால் உவையள் எல்லாரும் வீட்டை போகவேண்டிய ஆக்கள்தான்.

மற்றது அண்டைக்குச் சம்பந்தர் தலையிட்டுப் பிரச்சினையை வெண்டிவிட்டவரெல்லே? அதுக்குக் கைமாறா நீங்கள் என்ன செய்யிறியள் எண்டால் எலக்சன் நேரம் பாத்து வேலை நிறுத்தத்தைச் செய்து அவருக்குக் முகத்திலை கரியைப் பூசிறியள். எலக்சன் நேரத்திலை உப்பிடியான வேலை எப்பிடியான பாதிப்பைக் கொண்டு வந்துவிடும் எண்டு தெரியுமே?

இந்தச் சந்தர்ப்பத்தைப் பாத்து மினி பஸ் காரார் நல்ல சேவிஸ் செய்து சனத்திட்டை நல்ல பேர் எடுத்துப் போட்டாங்கள். தாராளமா பஸ் ஓடிச்சிது. காசில்லை எண்டு சொல்லுறவையளையும் வடிவா ஏத்தி இறக்கினாங்கள். நானும் இடையிலை ஒருக்கா யாழ்ப்பாணம் போய் வந்தனான். பஸ்ஸிலை ஏறினதுதான் தாமதம் "பெரியவருக்கு ஒரு சீற் குடுங்கோ" எண்டு கத்தினான். ஒரு குமர்பெட்டை எழும்பிச் சீற்றைத் தந்திது. நல்ல வடிவாப்போய் என்ரை வேலையை முடிச்சுப்போட்டு வந்தன்.

எங்கடை சீ.ரி.பீ க்காரரைப் பாத்துக் கொஞ்சம் சொல்ல வேணும்." தம்பியவை, நீங்கள் உங்கடை உரிமைக்காகப் போராடுங்கோ. அதைத் தப்பெண்டு சொல்ல வரேல்லை. ஆனால் பொது சனத்தின்ரை பக்கத்தைப் பற்றியும் கொஞ்சம் யோசிச்சுப் பாக்க வேணும். ஊர் உலகத்திலை இருக்கிறவை எல்லாரிட்டையும் வாகன வசதி இருக்கே. பெருவாரியான சனம் உங்கடை பஸ்ஸைப் கண்டுதான் ஏதேன் நன்மை தீமைக்கெண்டு போய்வருவினம். அப்ப நீங்களும் உப்பிடி பிரச்சினை எண்டால் சாதாரண பொதுசனந்தான் கஷ்டப்படும்.

அரசியல்வாதியும், பணக்காரரும் நல்ல வடிவா அவை வைச்சிருக்கிற வாகனத்திலை நின்மதியாச் சுவாசம் விட்டுத் திரிவினம். ஏனெண்டால் றோட்டுகளும் போக்குவரத்துக் குறைஞ்சு கொஞ்சம் லீவாக்கிடக்கும் எல்லே?

இந்த முறை பிரச்சினைக்குக் காரணமாயிருந்த.முதலமைச்சரே பிரச்சினையைத் தீத்தும் போட்டார். நல்லது அதுக்கு முன்னம் கொடும்பாவி எரிப்பம். கொட்டிலை எரிப்பம் எண்டு அழுகல் க்தையள் வேறை சொல்லுறியள்.

நீங்கள் என்ன யோக்கியமாவே தொழில் செய்யிறியள். அரைவாசி பஸ் கட்டையிலை ஏத்திற கொண்டிசனிலை தான் இருக்கு. அதை வைச்சுத்தானே பிழைப்பை ஓட்டுறியள். பஸ் ஸ்ராண்ட்டை வைச்சிருக்கிற வடிவு. உள்ளுக்கை சனம் போகேலாமை இடக்குமுடக்காக் கடையள். பஸ்ஸையும் வடிவாத்திருப்பேலாது. அதுக்கிடையிலை சனம் ஓட்டப்போட்டியாக் கிடக்கு. எங்கை பஸ் ஸ்ராண்டைச் சனத்துக்குச் சௌகரியமா வைச்சிருக்கக் கேட்டு வேலை நிறுத்தத்தைச் செய்யுங்கோ பாப்பம்? செய்ய மாட்டியள். ஏனெண்டால் அந்த ஊத்தை வேலை செய்யிறதும் உங்கடை ஆக்கள் தானே? எல்லாத்தையும் விட்டிட்டுச் சனத்தின்ரை வசதியைப் பாருங்கோ. ஏனெண்டால் சனம் பஸ்ஸிலை ஏறினாத்தான் உங்களுக்குக் காசு? அப்பதானே உங்கடை பிழைப்பும் ஓடும். என்ன?

- வில்லங்கம் விநாசி


# நீதி மறுக்கப்பட்டது
## அமெரிக்கத் தூதுவர் காட்டம்

திருகோணமலை,ஜன.04

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட விடயத்தில் தாமதமாகும் நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு சமமாகும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேசாப் நேற்றுப் புதன்கிழமை தனது விட்டரில் பதிவிட்டார்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி திருகோணமலை கடற்கரையில் வைத்து ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். சம்பவம் இடம்பெற்று 12 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், இன்றும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. இந்தக் கொலைகள் தொடர்பில் விசேட அதிரடிப் படைத் தரப்பினர் மீது குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. எனினும் எவரும் இதுவரை சட்டத்துக்கு முன் நிறுத்தப்படவில்லை. மனோகரன் ரகிவர், யோகராஜ் ஹேமசந்திரன், லோகிதராஜா ரொஹான், தங்கவேல் சிவானந்தா மற்றும் சண்முகராஜா கஜேந்திரன் ஆகியோரே கொல்லப்பட்ட மாணவர்களாவர். (அ)

## அந்தநாள் ஞாபகம்



### 04.01.1889

இலங்கையில் சபரகமுவா மாகாணம் என்ற புதிய மாகாணம் சேர் ஈ. என். வோக்கர் என்பவரால் உருவாக்கப்பட்டது.

## வினாத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 04

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணி இரண்டு கட்டங்களாக இடம்பெறுகின்றது.

இதற்கமைய, முதலாம் கட்டப் பரீட்சை விடைத்தாள்களின் திருத்தப் பணி நேற்றுப் புதன்கிழமை முதல் ஆரம்பமாகியதாகப் பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித்த தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் 13ஆம் திகதி வரை ஒரு கட்டமாக விடைத்தாள் திருத்தும் பணி இடம்பெறவுள்ளன. இதனால் பரீட்சை விடைத்தாள் திருத்தும் 57 பாடசாலைகளின் முதலாம் தவணைக்கான கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தும் பணி எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)



## மைத்திரிக்கு விருது

கொழும்பு,ஜன.04

போதைப் பொருள் ஒழிப்புத் திட்டப் பணிகளைப் பாராட்டி ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஆற்றிய சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் சர்வதேச விசேட விருதை போதைப் பொருள் ஒழிப்புத் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களின் சர்வதேச சம்மேளனம் வழங்கியது.

40 நாடுகள், 87 அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் சீனாவின் மெக்காவோ நகரில் இடம்பெற்ற நிகழ்வின் போது வழங்கப்பட்ட விருது நேற்றுப் பதன்கிழமை ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிடம் கையளித்தது.

2020ஆம் ஆண்டளவில் புகையிலைப் பாவனையை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்ட தீர்மானம் உட்படப் பல விடயங்கள் பற்றி இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. (அ)

## ஆண்டின் முற்பகுதியில் கொழும்புத் துறைமுகச் சட்டம்

கொழும்பு,ஜன.04

கொழும்புத் துறைமுக நகரம் தொடர்பாக புதிய சட்டம் நாடாளுமன்றத்தில் இந்த ஆண்டு முற்பகுதியில் கொண்டு வரப்படும் என்று துறைமுகத் திட்டப் பணிகளைப் பார்வையிட்ட போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

நாட்டுக்கு அவசியமான வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதற்குத் துறைமுக நகரத் திட்டம் உதவியாக இருக்கும். சுமார் 2 இலட்சம் மக்களுக்கான வாழ்விடமாகப் புதிய நவீன நகரம் மாறவுள்ளது. கடன் சுமையில் சிக்கியுள்ள நாட்டின் பொருளாதாரத்துக்கு மீளுயிர் அளிக்கும் வகையில், இந்தியப் பெருங்கடலின் கேந்திரமாக மாறும் இலக்கை அடைவதற்கு இந்தத் திட்டம் உதவியாக இருக்கும். மேலும் துறைமுக நகரத் திட்டம் கொழும்பு மாநகரசபையின் கீழும், கொள்ளுப்பிட்டியுடன் இதனை இணைக்கும் வகையில், இலகு தொடருந்து போக்குவரத்து வசதிகளுடன் கூடிய நிலத்தடிச் சுரங்கமும் அமைக்கப்படும். பல வானுயர்ந்த கட்டடங்களுடன், விசாலமான பொது நகரப் பூங்காவும் அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார். (அ)

## விபத்தில் சிக்கி சிப்பாய் பலி

கொழும்பு,ஜன.04

கிரிந்திவெலப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தொன்றில் இராணுவப் பெண்சிப்பாய் உயிரிழந்துள்ள நிலையில், இராணுவத்தினர் இருவர் படுகாயமடைந்தனர்.


கிரிந்திவெலயில் இருந்து பூகொடை நோக்கிப் பயணித்து கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று, முன்னால் பயணித்த பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட போது, எதிரில் வந்த பாரவூர்தியுடன் மோதியதில் விபத்து நேர்ந்துள்ளது. விபத்தையடுத்து முச்சக்கர வண்டியில் பயணித்த மூன்று இராணுவத்தினரும் காயமடைந்த நிலையில் வதுபிடிவல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், அதில் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (அ)


## கொக்கட்டிச்சோலையில் விபத்து

மட்டக்களப்பு,ஜன.04

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிப்பளைச் சந்தியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

பட்டிப்பளையில் இருந்து சென்ற பேருந்துடன், கொக்கட்டிச்சோலைப் பகுதியில் இருந்து சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே குறித்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த சாரதி, பெண்ணொருவர் மற்றும் குழந்தை ஆகிய மூவரும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். மேலும், விபத்து தொடர்பில் விசாரணைகளைக் கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)






## உர விநியோகத்துக்கு விரிவான நடவடிக்கை

கொழும்பு,ஜன.04

உரத்துக்குத் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களை இனங்கண்டு உரிய பகுதிகளுக்குத் தேவையான உரத்தை விநியோகிக்க விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யூரியாத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் தனியார் துறையிடமிருந்து யூரியா பெற்றுக் கொள்ளப்படவிருக்கிறது. 40 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிய கப்பல் விரைவில் இலங்கையை வந்தடையவிருக்கிறதென்று தேசிய உரச் செயலகம் நேற்றுப் புதன்கிழமை அறிவித்தது.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமையப் பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு உரம் கிடைக்கவிருக்கிறது. பெரும்பாலான விவசாயிகளுக்குத் தேவையான உரம் வழங்கப்பட்டுள்ளது. பெரும்போக உரத்துக்கென இதுவரை ஏழு தசம் ஐந்து பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தேசிய உரச் செயலகம் தெரிவித்தது. (அ)

### கட்டுப்பாடு விலகியதால்
## சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு,ஜன.04

இலங்கை செல்லும் பிரிட்டன் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

பிரிட்டன் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இலங்கைக்கு வருகிறார்கள். மாறுபட்ட அம்சங்களை இலங்கையில் பார்க்க வருகின்றனர் என அவர் தெரிவித்தார். 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கப்பல் துறை மீதான நீண்டகாலக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதை உயர்ஸ்தானிகர் வரவேற்றார்.

மேலும், இது முதலீடுகள் மற்றும் வர்த்தகத்தை அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டினார். 2025ஆம் ஆண்டை இலக்கு வைத்துக் கப்பல் துறை மீதான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளது. சமகால அரசாங்கத்தின் தொலைநோக்கு அணுகுமுறை பாராட்டப்பட வேண்டும் எனப் பிரிட்டன் உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## இறந்த பின்னும் உயிர் காத்த இளைஞன்

பொலன்னறுவை,ஜன.04

பொலன்னறுவை வைத்தியசாலையில் உயிரிழந்த இளைஞர் ஒருவரால் மூன்று பேர் உயிர் பிழைத்தனர்.

தலையில் நரம்பு வெடித்தமையினால் இரத்தம் வெளியேறி உயிரிழந்த 35 வயதுடைய இளைஞனின் கல்லீரல் மற்றும் இரண்டு சிறுநீரகங்கள் கொழும்பு மற்றும் கண்டி வைத்தியசாலையிலுள்ள மூன்று நோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்த இளைஞனின் கல்லீரலைக் கொழும்புக்கு விரைவாகக் கொண்டு வருவதற்காக விசேட வைத்தியர்கள் குழுவொன்று இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் பொலன்னறுவைக்கு அனுப்புவதற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நடவடிக்கை மேற்கொண்டார். கல்லீரல் பொருத்துவதென்றால் இன்னும் ஒருவரிடம் பெற்றதனை உடனடியாக நோயாளியிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இதனால் விமானப் படைக்குச் சொந்தமான விமானம் பயன்படுத்தப்பட்டது. இந்தக் கல்லீரல் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 56 வயதுடைய நோயாளிக்கே பொருத்தப்பட்டது. அவர் தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் இருவருக்கே இரண்டு சிறுநீரகங்களும் பொருத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (அ)

# தொடர்ச்சிகள்

## அரசியலமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டும். குருட்டுத் தனமாகவும் இருட்டுத் தனமாகவும் அமையக் கூடாது. நாடாளுமன்றத்தில் அண்மையில் சில தீர்மானங்கள் இரவோடிரவாக நிறைவேற்றப்பட்டன. அவை போன்று ஓர் தீர்வுத் திட்டத்தைக் கொண்டுவர முடியாது. இந்த நாட்டு மக்களின் ஆணையைப் பெறப் பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

இந்தத் தீர்வுத் திட்டத்தில் நிறைய ஒளிவு மறைவுகள் உள்ளன. குறிப்பாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் என மூவின மக்களையும் சந்தேகம் கொள்ளவைக்கும் வகையில் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கை அமைந்துள்ளது. எனவே எல்லா இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும். எந்தவொரு இனமும் ஏனைய இனங்களால் அடக்கப்படாமல் - ஒடுக்கப்படாமல் தன்மானத்துடன் வாழ்வதை உறுதிப்படுத்துவதாக தீர்வு அமையவேண்டும்" என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

## பணிப் புறக்கணிப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளாக இன்றும் தொடரவுள்ளது. தமிழ் நாட்டில் இருந்து கடத்தி வரப்படும் போதைப் பொருள்கள் கைமாறும் கேந்திர மையமாக இ.போ.ச. பஸ் நிலையமே உள்ளது.

இந்நிலையில் தற்போதைய பஸ் நிலையம் புதிய இடத்துக்கு மாற்றப்படுமாயின், போதைப் பொருள் வர்த்தகம் பாதிக்கப்படும். இதனாலேயே அவர்கள் இ.போ.சவினரைத் தூண்டி விட்டு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுத்துகின்றனர்.

மேலும் "வட-பிராந்திய சாலைகளில் கையொப்பம் வைத்து விட்டு, பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவோர் மீது உடன் நடவடிக்கை தேவை. பணிக்குத் திரும்பாத ஊழியர்களை இடை நிறுத்தி பதிலாக பிறரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ச)

## காலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இ.போ.சவின் வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தினர். இந்நிலையில் அவர்களை முதலமைச்சர்.சி.வி.விக்னேஸ்வரனும், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த அமைச்சின் குழுவினரும் நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பேச்சின்போது, வவுனியா புதிய பஸ் நிலையத்தில் 40/60 என்ற பங்கீட்டு அடிப்படையில் சேவைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்படுகிறது என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் சில மணித்தியாலங்களிலேயே தொழிற்சங்கத்தினர் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தினர். பணிப் புறக்கணிப்புப் போராட்டத்துடன் உண்ணாவிரதப் போராட்டத்திலும் தாம் குதிக்கப் போகிறோம் என தொழிற்சங்கத்தின் செயலாளர் அறிவித்தார். அத்துடன் போராட்டத்தையும் உடனடியாகவே ஆரம்பித்தார். (ச)

## நிச்சயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அவர் தெரிவித்தவை வருமாறு:

நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் மதவாதத்தைக் கிளப்பும் வகையில் சிலர் செயற்படுகின்றனர். எங்கள் கட்சியில் மதவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அனைத்தும் சமம் என்பதே எமது கோட்பாடு. இந்தத் தேர்தலை வெறுமனே அபிவிருத்தியை மட்டும் கொண்டதாக மட்டுப்படுத்தி விட முடியாது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை பல சவால்களுக்கு மத்தியிலும் சிந்தித்து உரிமைக்காக செயற்பட வேண்டிய கட்டாய நிலையே காணப்படுகின்றது.

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்களுக்கானவை என்று எதுவுமில்லை. ஆனால் எல்லாமே இருக்கிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறுகிறது. இதன்படி அக்கட்சிக்கு வாக்களித்தால் இடைக்கால அறிக்கையைத் தமிழ் மக்கள் ஏற்றதாக அர்த்தமாகி விடும். இதனை ஏற்காது நிராகரிக்க வேண்டும். நடைமுறைச் சாத்தியமானதை செய்ய வேண்டுமென்று சிலர் பேசுகின்றனர். அவ்வாறு நடைமுறை சாத்தியமானது என்றால், அவர்கள் தருவதை நாங்கள் பெற்றுக் கொள்வதாகத்தான் அமையும். குறிப்பாக இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்கும்போது இதுதான் நடைமுறைச் சாத்தியமானது என்றொரு தீர்வை முன்வைத்தால் எமு இனம் அழிய வேண்டியதுதான். அவ்வாறு தருவதைப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல் அமைப்புக்களே தேவையில்லை.

எமக்குத் தேவையானதை நாமே கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும். தருவதைப் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை. இன்று மக்கள் தமக்குத் தேவையானதைக் கேட்கும் தரப்பினரை இனங்கண்டு வருகின்றனர். அதாவது மாற்றத்தை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளனர். விரக்தியடைந்து, மக்கள் வீடுகளுக்குள் முடங்காது எங்களுடன் இணைந்து பயணிக்க வேண்டும். அனைவரும் எம்மோடு இணைந்து பயணித்தால் மாற்றத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் நாங்கள் செயற்படுவோம். இதன் மூலம் மாற்றத்தை நிச்சயம் மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம் - என்றார். (ச)

## மத்திய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியது. இதனை மத்திய வங்கியே செய்யவுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் தகவல்களுக்கு அமைய சட்ட நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டும் எனவும் அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

அந்தக் காலதத்திலேயே அதிகமாக ஊழியர் சேமலாப நிதியில் மோசடி இடம் பெற்றுள்ளது எனச் சுட்டிக் காட்டியதுடன், இந்த அறிக்கையின் பிரதி தற்போது சட்ட மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அறிக்கையின் பரிந்துரைப்படி குற்றவியல் மற்றும் சிவில் வழக்கு தாக்கல் செய்வது குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் இலஞ்சம், ஊழல் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன.மகேந்திரன் மற்றும் வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட வேறு நபர்களின் தலையீட்டின் காரணமாக பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தால் சட்டத்துக்கு மாறான முறையில் பணம் சம்பாதிக்கப்பட்டுள்ளது. 2015 பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்ற ஏலம் மூலம் மாத்திரம் பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனம் 68. 8 கோடி ரூபாவுக்கும் அதிக வருமானம் ஈட்டியுள்ளதாக கூறப்பட்டுள்ளது. மொத்தமாக பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வருமானம் குறைந்தது ஆயிரத்து 114.5 கோடி ரூபாவாகும்.

அதேசமயம், இதனால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் 852.9 கோடி ரூபாஆகும்.

மகேந்திரன் தன்னிச்சையான தீர்மானத்தின் ஊடாக பிணைமுறி விநியோகத்தின் போது உள்ளக தகவல்களை பகிரங்கப்படுத்தியமைக்கு பொறுப்புக் கூற வேண்டும். அர்ஜூன் மகேந்திரனை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்தமைக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க பொறுப்புடையவர்.

அலோசியஸ் குடும்பத்துக்கு சொந்தமான மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த "வோல்ட் என்ட் ரோ" நிறுவனத்தால் பெண்ட் ஹவுஸ் மாடி வீட்டுக்கு வாடகை செலுத்தியமை சம்பந்தமாக முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க பொறுப்பு ஏற்க வேண்டும். அவருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட வேண்டும் என்பதுடன் ஆணைக்குழு முன்னிலையில் பொய் சாட்சி வழங்கியதற்காக குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர வேண்டும்.

தண்டனை பெற்றுக் கொடுப்பதற்காக, பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனம், அர்ஜூன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன போன்றோர் மற்றும் அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள பொறுப்புக் கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக குற்றவியல் மற்றும் சிவில் சட்டத்தை முன்னெடுப்பதற்கு பரிந்துரைக்கிறது. அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை மத்திய வங்கியில் இதுபோன்ற மோசடிகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதற்கு புதிய நிதிச்சட்டம் உருவாக்கப்பட வேண்டும். நிதிச் சபை உறுப்பினர்கள் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநரை நியமிக்கும் போது அரசியலமைப்பு சபையின் அனுமதியுடன் இடம் பெற வேண்டும். 2008ஆம் ஆண்டிலிருந்து 2015ம் ஆண்டுவரை இடம்பெற்ற பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு இந்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கவில்லை என்பதனால் அதுகுறித்து விசாரிக்கவில்லை என்றும், எனினும் அது குறித்து விசாரிப்பது சிறந்தது என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

மீளப்பெற வேண்டிய பணத்தை சிவில் சட்டத்தினூடாக பெற முயற்சிப்பது காலம் தாழ்த்தும் செயல் என்பதால், இதற்காக நாடாளுமன்றத்தில் புதிய சட்டவரைவு ஒன்றை நிறைவேற்றி அந்தப் பணத்தை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன் இந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஏற்பட்ட செலவுகளை பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது- என்றார் ஜனாதிபதி.

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பதிலளித்து வருகிறார். இந்த வாரம் "சேர்! உங்கள் சென்ற வாரக் கேள்விக்கான பதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளரை பதில் தர வைத்துள்ளது. அதற்கு உங்கள் மறுமொழியை எதிர்பார்க்கின்றோம்." எனக் கேள்வி எழுப்பப்பட்டது. "ஏட்டிக்குப் போட்டியாகப் பதில்கள் அளிப்பது பத்திரிகைகளுக்கு தீனியைப் போடலாம். ஆனால் சமூகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் அதனால் நான் தக்க காரணமின்றி இவ்வாறான வாதப்பிரதி வாதங்களில் ஈடுபடுவதில்லை. எனினும் நீங்கள் கேட்பதால் பதிலளிக்கிறேன்" எனத் தொடங்கி துரைராஜசிங்கத்தின் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்குமாக 20 விடயங்களுக்கு முதலமைச்சர் அளித்த நீண்ட பதிலின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு:

கொழும்புடன் நல்லுறவைப் பேண வேண்டும் என்கிறார் நண்பர் (துரைராஜசிங்கம்). நான் கொழும்பில் பிறந்து வளர்ந்தவன். நாட்டின் பெரும்பாலான இடங்களில் நான் சம்பந்தம் கொண்டவன். மூன்று மொழிகள், நான்கு மதங்களுடன் ஓரளவு பரீட்சயம் பெற்றவன். தெற்குடன் நடந்துகொள்ள நண்பர் எனக்கு சொல்லித்தரக் கூடாது. அவர் போன்றவர்கள் தெற்குடன் நல்லெண்ணம் கொள்ள வேண்டும் என்றால் அவர்களுக்குப் பணிந்து போக வேண்டும் என்ற கருத்துடையவர்களாகத் தென்படுகின்றனர். தெற்கிற்கு அடங்கிப் போகும் ஒருவரை முதலமைச்சர் ஆக்க என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைத்திருந்தால் நண்பரைப் போன்ற ஒருவரையே முதலமைச்சராக நிறுத்தியிருக்கும்.

புகழ்பாடி, பணிந்து, இரந்து, எவரதும் பெரிய மனதின் பெறுபேறுகளைக் கொண்டு தமிழ் மக்களின் உரித்துக்களைப் பெற வேண்டிய அவசியம் எமக்கில்லை. தம்பி பிரபாகரன் அவர்கள் அரசியல் சூட்சுமத்தில் அனுபவம் முதிர்ந்தவர்களின் அறிவுரைகளைப் புறக்கணித்திருக்கலாம். அதனால் மரணத்தையும் தழுவியிருக்கலாம். ஆனால் மண்டியிட்டு மலர் மாலை பெற வேண்டிய அவசியம் அவருக்கு என்றுமே இருந்ததில்லை. நாம் இந்நாட்டின் மூத்த குடிகள். எமது தகைமை உலகறிந்தது. எனினும் அந்த உண்மையைக் கொழும்பு உதாசீனம் செய்து வருகின்றது.

கொழும்புடன் முரண்படாது எவ்வாறு எமது உரிமையைப் பெற்றெடுப்பது? 2016ல் தக்க தீர்வைப் பெற்று விடுவோம் என்று முரண்படாது வாழ்ந்து வந்த எம் தலைவர் கூறினாரே! பெற்று விட்டோமா? அதிகாரங்களைக் கூட்டித் தரவேண்டும் என முதலமைச்சர்கள் கேட்பது ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் உள்ளேயே. அது அப்போதைக்கு ஒரு சில நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தாலும் எமது இனத்தின் நீண்டகால வாழ்க்கைக்கு நன்மை அளிக்காது. அல்பிரட் துரையப்பாவோ, குமாரசூரியரோ, டக்ளஸ் தேவானந்தாவோ கேட்டார்கள் கொடுத்தோம் என்று தான் இருக்கும். தமிழர்கள் உரித்துடன் கேட்டதை நாம் அள்ளிக் கொடுத்தோம் என்றிருக்காது. இன்று நாம் தெற்கின் தயவிலேயே வாழ்கின்றோம். அதை நண்பர் உணராது உள்ளார். பல்லிளித்துப் பயன் பெறுவதென்றால் எந்தத் தமிழ்த் தலைவரிலும் பார்க்கக் கூடிய சலுகைகளை தெற்கில் இருந்து பெற விக்னேஸ்வரனால் முடியும். அவன் தெற்கில் பிறந்து வளர்ந்தவன். ஆனால் அவ்வாறு பல்லிளித்துப் பெற்றால் காலக் கிரமத்தில் எம்மவர் அடிமைகள் ஆகிவிடுவார்கள். சிங்களக் குடியேற்றங்கள், சிங்கள மொழி, பௌத்த மதத்தினர் உள்ளீடல்கள் என்று எம்மை 25 வருடங்களில் இருந்த இடம் தெரியாது ஆக்கி விடுவார்கள். நாமும் வெளிநாடுகள் நோக்கித் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருப்போம்.

ஜெருஸலத்திற்கு நடந்துள்ளதைப் பாருங்கள். ஆகவே எமது தனித்துவத்தைப் பேணிக் கொண்டு தான் நான் தெற்குடன் உறவாடி வருகின்றேன். பல தெற்கத்தைய அமைச்சர்களுடன் கூடி பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேன். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் எனக்குச் சமமானவர்களே. எனக்கு மேலானவர்கள் அல்ல. கூனிக் குறுகி அவர்களிடம் யாசகம் பெற வேண்டிய அவசியம் எனக்கில்லை. பிரபாகரன் பிறந்த மண்ணில் இவ்வாறு யாசகம் பெற எத்தனிப்போர் வாழ்ந்து வருவது விந்தையே! மற்றவர்கள் தமது தயவின் அடிப்படையில் தருவனவற்றை ஏற்று அவற்றிற்கு நன்றிக் கடன்படுபவர்களை எலும்புத் துண்டுக்ளைப் பெறுவனவற்றுடன் ஒப்பிட்டது ஒரு தவறாக இருக்கலாம். அவ்வாறான உயிரினங்கள் கூட தமது வாலை மிதித்துவிட்டால் சத்தம் போட்டாவது எதிர்ப்பை வெளிக் காட்டுவன. காணி பறிபோகின்றது. வாழ்வாதாரங்கள் பறிபோகின்றன. வாணிபம் பறிபோகின்றது. சுற்றுலாவும் எமது வளங்களும் சுமந்து செல்லப்படுகின்றன. குடியேற்றம் குயுக்தியுடன் ஈடேற்றப்படுகின்றன. காணாமல் போனோர் பற்றி கடுகளவுஞ் சிந்தனை இல்லை. பெண் தலைமைக் குடும்பங்கள் படும் பாடு பற்றி ஆராய ஆர்வமில்லை. இவற்றிற்காக ஒரு திடமான குரல் கூடக் கொடுக்காது தருவதை ஏற்போம் என்பது நண்பருக்குச் சரியாகப் படுகின்றனவா? அவரே பதில் தரட்டும்! (ச)

## கூட்டணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தமிழர் விடுதலைக் கூட்டணியை கடந்த 2004ஆம் ஆண்டு சிலர் தங்கள் சுயநலனுக்காக உடைத்து இருக்காவிட்டால் அந்த ஆண்டே போர் நிறைவடைந்திருக்கும். அப்போது போரை நிறைவுக்கு கொண்டுவருவத்ற்கு புலிகளும் சாதகமான சமிக்ஞையைக் காண்பித்தார்கள். ஆனால் சிலரின் சுயநலன் சார்ந்த செயற்பாடுகளால் போர் மேலும் 5 வருடங்கள் நடந்தது.

பல ஆயிரக்கணக்கான இலட்சியப் போராளிகள் உயிரிழந்தனர். பல லட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். பிரபாகரன் என்றொரு இலட்சிய போராளி - இலட்சிய வீரன் இன்று இருந்திருப்பான். பல கோடி மதிப்பு சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும். இத்தனை அழிவுகளுக்கும் சில சுயநலவாதிகளே பிரதான காரணம். இதில் 3 சுயநலவாதிகளை நான் அடையாளப் படுத்துவேன். அவர்களின் பெயர்களை நான் இங்கே கூற விரும்பவில்லை.

சமஷ்டி பற்றி பேசுகிறார்கள். 2005 ஆம் ஆண்டே சமஷ்டி எங்கள் கதவுகளை தட்டியது. ஆனால் அதனை நாங்கள் கண்டுகொள்ளவேயில்லை. அதற்கும் காரணம் தமிழ் மக்களை வழிநடத்திய தீயவர்களே - என்றார். (ச)

# 100 அடி பள்ளத்துள் பாய்ந்தது பேருந்து



## 36 பேர் சாவு

லிமா,ஜன.04

பெரு நாட்டில் மலைப் பாதையில் இருந்து பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 36 பேர் பலியாகினர்.

பெரு நாட்டின் தலைநகரான லீமாவிலிருந்து 40 கி.மீற்றர் தொலைவில் பசமாயோ என்னும் அபாயகரமான கடற்கரை நகரம் உள்ளது.

இந்தச் சூழலில், பசமாயோ நகரில் இருந்து ஒரு பேருந்து 57 பயணிகளுடன் லீமா நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சாலையில் பேருந்து சென்று கொண்டிருந்த போது ஒரு ஆபத்தான வளைவில் எதிரே வந்த சிறிய லொறி மீது மோதியதில் சாலையை ஒட்டி இருந்த சுமார் 100 மீற்றர் ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்ததில் பேருந்தில் . பயணம் செய்த அனைவருக்கும் பலத்த காயமும், 36 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடைமாகவிருப்பதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது. (இ)

# பிரேசில் சிறையில் பயங்கர மோதல்



சாபாவ்லோ,ஜன.04

பிரேசில் சிறையில் புத்தாண்டு தினக் கொண்டாட்டத்தின் போது கைதிகளுக்குள் நிகழ்ந்த சண்டையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் பலியாகினர்.

பிரேசில் நாட்டில் உள்ள சிறைகளில் கொலை, கொள்ளை, கடத்தல், போதை வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் நிரம்பி வழிகின்றனர். அதே நேரத்தில் சிறைகளில் போதுமான பணியாளர்கள் இல்லை.

இந்த நிலையில் அங்கு கோய்யாஸ் மாகாணத்தின் தலைநகரான கோய்யானியாவையொட்டியுள்ள கிராமப்புறச் சிறையில் ஏராளமான ஆயுதங்களைக் கொண்டுள்ள கைதிகள் கும்பல், எதிர் கும்பலுடன் சண்டை போட்டதில் துப்பாக்கிச்சூடும் நடைபெற்றது.

இதில் 9 பேர் குண்டு பாய்ந்து இரத்த வெள்ளத்தில் பிணமாயினர். 14 கைதிகள் படுகாயமடைந்தனர். மேலும் சிறை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த

தடுப்புகளை உடைத்தெறிந்து இரு தரப்பையும் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட கைதிகள் சிறையில் இருந்து தப்பினர். அவர்களில் 30 பேர் மீண்டும் பிடிபட்டதோடு 80 பேர் தலைமறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பூஜை போட்டாச்சு



சென்னை,ஜன.04

'மாரி-2' படத்தின் பூஜை கடந்த டிசெம்பர் மாதம் நடந்த நிலையில், படத்தின் படப்பிடிப்பு இந்த மாதம் தொடங்கவிருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.


'வடசென்னை', 'எனை நோக்கி பாயும் தோட்டா' போன்ற படங்களின் இறுதிக் கட்டப் படப்பிடிப்பில் தனுஷ் பிசியாக இருக்கிறார்.

இந்த இரு படங்களை முடித்த பிறகு விரைவில் பாலாஜி மோகன் இயக்கத்தில் 'மாரி-2' படத்தில் நடிக்கவிருக்கிறார் தனுஷ்.

முக்கிய கதாபாத்திரத்தில் கிருஷ்ணாவும், வில்லனாக மலையாள நடிகர் டோவினோ தோமஸூம் நடிக்கின்றனர். தனுஷ் ஜோடியாக சாய் பல்லவி நடிக்கிறார். முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வரலட்சுமியும் ஒப்பந்தமாகியுள்ளனர்.

படத்தின் பூஜை குறித்து படக்குழு அமைதி காத்து வந்த நிலையில், புத்தாண்டன்று படத்தின் பூஜையைத் தொடங்கியதோடு படப்பிடிப்பு இந்த மாதத்தில் தொடங்க இருப்பதாகவும் இயக்குநர் பாலாஜி மோகன் தெரிவித்தார். (இ)

# விண்ணில் மிதந்து நடந்த முதல் ஆய்வு



வோஷிங்டன்,ஜன.04

விண்வெளியில் கண்டறியப்பட்ட நுண்ணுயிரியை முதல் முதலாக விண்வெளியில் உள்ள ஆய்வு நிலையத்திலேயே சோதனை செய்து உறுதி செய்தனர்.

விண்வெளியில் ஐ.எஸ்.எஸ். என்று அழைக்கப்படுகிற சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து, பன்னாட்டு விஞ்ஞானிகள் ஆய்வுப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மிதக்கும் விண்வெளி நிலையம், பூமியில் இருந்து சுமார் 400 கி.மீ. உயரத்தில் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில், முதல் முறையாக நுண்ணுயிரியை விண்வெளியிலேயே ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துள்ளனர். இது வரை விண்வெளியில் கிடைக்கும் நுண்ணுயிரியைப் பூமிக்கு அனுப்பி ஆராய்ச்சி செய்த பிறகே உறுதிப்படுத்துவர். ஆனால் இந்த உயிரை விண்வெளியிலேயே சோதனை செய்து உறுதி செய்தனர். மின்யான் கருவிகளைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அதன் மாதிரிகள் பூமிக்கு அனுப்பப்பட்டு மீண்டும் ஆய்வு செய்யப்பட்டது. (இ)

# ரஜினியின் காவலனாகும் லாரன்ஸ்



சென்னை,ஜன.04

ரஜினிகாந்தின் காவலனாக இன்று வியாழக்கிழமை முதல் தனது பயணத்தைத் தொடங்க இருப்பதாக ராகவா லாரன்ஸ் நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

ரஜினி அரசியலுக்கு வருவாரா? மாட்டாரா? என்று பல ஆண்டுகளாக, ரசிகர்கள் பலரும் எதிர்பார்த்து வந்த நிலையில், 2017 ஆம் ஆண்டின் கடைசி நாளில் அதற்கான விடை கிடைத்தது.

ரசிகர்கள் சந்திப்பின் கடைசி நாளின் போது ரசிகர்களின் முன் பேசிய ரஜினிகாந்த், நான் அரசியலுக்கு வருவது உறுதி. விரைவில் தனிக்கட்சி தொடங்குவேன் என்றார்.

சினிமாத் துறையில் அவரது தீவிர ரசிகனாகவிருக்கும் நடிகர் ராகவா லாரன்ஸூம் ரஜினியின் அரசியல் பிரவேசத்துக்கு வரவேற்பு தெரிவித்த அதேநேரம் அவர் அரசியலுக்கு வருவாரா என்ற கேள்விக்குத் தான் 10 வருடங்களுக்கு முன்பே ஆரம்பித்து விட்டதாகவும், அரசியலில் ரஜினியின் தீவிரத் தொண்டனாக, ஒரு காவலனாகத் தான் இருப்பேன் என்றும், எனது தாய்க்குக் கட்டிய கோவிலில் இருந்து நாளை (இன்று) முதல் ரஜினியின் காவலனாக எனது பயணத்தைத் தொடங்கவுள்ளேன் எனத் தெரிவித்தார். (இ)

# விசுவாசத்தில் இல்லை



சென்னை,ஜன.04

அஜித் மீண்டும் சிவா இயக்கத்தில் நடிக்கவுள்ள படத்துக்கு விசுவாசம் எனப் பெயரிடப்பட்டு படப்பிடிப்பும் ஆரம்பித்துவிட்டது. இந்தப் படத்தின் இசையமைப்பாளர் யுவன் என அறிவிக்கப்பட்ட போதும் தற்போது அவர் வெளியேறியுள்ளார்.

மங்காத்தா கூட்டணி மீண்டும் இணைந்ததால் சந்தோஷத்தில் இருந்த அஜித் ரசிகர்களுக்கு இந்தச் செய்தி கொஞ்சம் அதிச்சியளித்துள்ளது. (இ)


# பாதியில் முடிந்த ஆட்டம்

பிரிஸ்பேன் டென்னிஸ் தொடரிலிருந்து இடை நடுவே வெளியேறினார் முருகுஜா.

பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் விம்பிள்டன் சம்பியனும், உலக தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருப்பவருமான ஸ்பெயின் வீராங்கனையான கார்பின் முகுருஜா, 53ஆம் நிலை வீராங்கனையான அலெக்சாண்ட்ரா குருனிச்சை (செர்பியா) சந்தித்தார்.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் முகுருஜா முதல் சுற்றை 7:5 என்ற கணக்கில் தனதாக்கினார். அடுத்த சுற்றில் அதிக வெப்பத்தைத் தாங்க முடியாமல் முகுருஜா திணறினார். அந்தச் சுற்றை அவர் 6:7 என்ற கணக்கில் குருனிச்சிடம் பறிகொடுத்தார். 2ஆவது சுற்று ஆட்டம்முடிந்ததும் ஆடுகளப்பகுதியில்பிசியோ தெரோபிஸிடம் சிகிச்சை பெற்று முகுருஜா களம் திரும்பினார்.

எனினும், முகுருஜா 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த போது மீண்டும் தசைப்பிடிப்பால் பாதிக்கப்பட்டு அவர் ஆட்டத்திலிருந்து விலகினார். இதனால் அலெக்சாண்ட்ரா குருனிச் காலிறுதிக்கு முன்னேறினார். (ஐ)





# காலிறுதியில் ஷரபோவா

ஷின்ஜென் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி சீனாவில் நடந்துவருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 5 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவரான ரஷ்யாவின் மரியா ஷரபோவா 4:6, 6:3, 6:2 என்ற புள்ளிக் கணக்கில் அமெரிக்காவின் அலிசன் ரிஸ்கியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு ஆட்டத்தில் கஜகஸ்தான் வீராங்கனை ஜரினா டியாஸ் 6:3, 6:7, 6:4 என்ற புள்ளிக் கணக்கில் சீனாவின் ஷாங் ஹூய்யைத் தோற்கடித்து காலிறுதிக்குத் தகுதி பெற்றார். காலிறுதி ஆட்டத்தில் ஷரபோவா, கஜகஸ்தான் வீராங்கனை ஜரினா டியாஸ்சை சந்திக்கிறார். (ஐ)

# துடித்த வீரரை கவனிக்காத வீரர்கள்



டில்லி, ஜன. 04

டில்லி ரஞ்சிக்கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் பந்து பட்டுத் துடிதுடித்த துடுப்பாட்ட வீரரைக் கண்டுகொள்ளாத, களத்தடுப்பில் ஈடுபட்ட வீரர்களின் செயல் குறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

டில்லி- விதர்பா அணிகளுக்கு இடையேயான ரஞ்சிக்கோப்பை இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இப்போட்டியின் போது டில்லியின் வேகப்பந்து வீச்சாளர் வீசிய பவுன்சர் பந்து தாக்கியதில், துடுப்பாட்ட வீரர் துடிதுடித்துத் தரையில் விழுந்துள்ளார். வேதனையில் துடித்த அந்த வீரருக்கு உதவ டில்லி அணி வீரர்கள், நடுவர்கள் உள்ளிட்ட எவருமே முன் வராதது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

எதிர்முனையில் இருந்த மற்றொரு துடுப்பாட்ட வீரர் முன்வந்து; மைதானத்துக்கு வெளியிலிருந்து உதவிக்கு அழைத்துள்ளார். இதனால் ரசிகர்கள் பலர் தமது அதிருப்தியை சமூக வலைதளங்களில் பகிர்ந்துவருகின்றனர்.

அப்போட்டியில், ஏழு தடவைகள் ரஞ்சிக் கோப்பையை வென்றுள்ள டில்லி அணியை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் விதர்பா அணி வீழ்த்தி முதல் முறையாக ரஞ்சிக் கோப்பையை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஷஸ்: ஐந்தவது ஆட்டம் இன்று

சிட்னி, ஜன. 04

அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகள் மோதும் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று சிட்னியில் தொடங்கியது. இதிலாவது இங்கிலாந்து அணி ஆறுதல் வெற்றி பெருமா என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் டெஸ்ட் போட்டி தொடர் அவுஸ்திரேலியாவில் நடந்து வருகிறது. 5 போட்டி கொண்ட தொடரில் முதல் 3 ஆட்டங்களில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிவிட்டது. நான்காவது போட்டி சமநிலையில் முடிந்தது.

இந்நிலையில், இலங்கை நேரப்படி காலை 5 மணிக்க ஐந்தாவது டெஸ்ட் போட்டி ஆரம்பிக்கிறது.

ஜோரூட் தலைமையிலான இங்கிலாந்து அணி ஏற்கனவே டெஸ்ட் தொடரை இழந்துவிட்டதால், ஆறுதல் வெற்றி பெறக் கடுமையாக போராடும். அந்த அணியில் சிறந்த வீரர்கள் இருந்தும் தொடரை இழந்தது. ஆனால் கடைசி டெஸ்டில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் அந்த அணி உள்ளது. (ஐ)

# ஹத்ருசிங்கவைப் புகழும் பங்களாதேஷ் வீரர்



பங்களாதேஷ், ஜன. 04

"இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளரான சண்டிக ஹத்ருசிங்க ஒரு சிறந்த பயிற்சியாளர்" என்று பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட வீரரான தமிம் இக்பால் கூறியுள்ளார்.

இலங்கை அணிக்கு தற்போது தலைமைப் பயிற்சியாளராக உள்ளவர் சண்டிக ஹத்ருசிங்க. இவரின் பயிற்சியால் இலங்கை அணி சாதிக்கும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட வீரரான தமிம் இக்பால் அவரைப் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

குறித்து அவர் கூறுகையில்,

"சண்டிக ஒரு சிறப்பான பயிற்சியாளர். அவர் அளித்த பயிற்சியின் மூலம் பங்களாதேஷ் கடந்த சில ஆண்டுகளாக சிறப்பாக விளையாடியது.

அவர் தலைமையில் தான் நாங்கள் எங்களுடைய சொந்த மண்ணில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்கா போன்ற அணிகளை வீழ்த்தினோம் அதுமட்டுமின்றி 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் காலிறுதிக்கும் சென்றோம். 2017ஆம் ஆண்டு நடந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அரையிறுதிப் போட்டிக்கு சென்றோம். இது அனைத்துமே அவரையே சாரும்.

தற்போது அவர் இலங்கை அணிக்குப் பயிற்சியாளராக உள்ளார், அவருக்கு என்னுடைய வாழ்த்துக்கள்" என்று கூறியுள்ளார். (ஐ



# ஆண்கள் அணிக்கு பயிற்சியாளராக வேண்டும் மிதாலி ராஜ்

"இந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணியின் தலைவி மிதாலி ராஜ், ஆண்கள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக மாற வேண்டும்" என்று ஹிந்தி நடிகர் ஷாருக்கான் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பல்வேறு சாதனைகளை செய்து வரும் இந்திய அணித்தலைவி மிதாலி ராஜ், இந்தியாவில் அதிகம் பேசப்படும் நபராக மாறி வருகிறார். 35 வயதாகும் இவர், பெண்கள் கிரிக்கெட்டில் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீராங்கனை ஆவார்.

சமீபத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற ஷாருக்கான், மிதாலியிடம் பல கேள்விகளைக் கேட்டார். அப்போது பேசிய அவர், மிதாலியை ஆண்கள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகப் பார்க்க வேண்டும் என்று கூறினார்.

இதற்குப் பதிலளித்த மிதாலி,

"எப்போதும் என்னுடைய சிறந்ததைத் தர விரும்புகிறேன். கிரிக்கெட் போட்டியின்போது புத்தகம் படிப்பதால், கவனம் சிதறாமல் தொடர்ந்து ஆட்டத்தில் கவனம் செலுத்த முடிகிறது. களத்தில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த புத்தகங்கள் உதவுகிறது" என்றார். (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 04.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.